**நாள் 18.06.2025** **STC 97/2020** **அ.சா .1**

**பெயர் லோகநாதன்**
**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**எதிரி தரப்பில்** 311 Crpc **ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் கு.வி**

(1) 19.11.2018 ம் தேதி காலை 11.30 மணி அளவில் முருகானந்தம் என்பவர் வீட்டில் வைத்து சோதனை செய்தேன். எதிரி கடை எதுவும் நடத்தவில்லை என்றால் சரிதான். வீட்டில் வைத்து வியாபாரம் செய்து வந்தார். ரகசிய தகவலின் அடிப்படையில் வியாபாரம் செய்ததாக தெரிய வந்தது. என்னுடன் நியமன அலுவலர் மற்றும் இரண்டு உணவு பாதுகாப்பு அலுவலர்கள் சோதனை செய்ய வந்தார்கள். எதிரியின் முகவரி தெரியுமா என்றால் தெரியும். எதிரியின் முகவரி தெரியாமல் நானே ஒரு முகவரி எழுதி புகார் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கடந்த 04.10.2019 ம் தேதி எதிரிக்கு பதிவுத் தபால் அனுப்பியதாக தாக்கல் செய்யப்பட்டுள்ள அஞ்சல ரசீதில் தாராபுரம் முகவரி உள்ளது என்றால் சரியல்ல கணியூருக்கு அஞ்சலக தலைமையகம் தாராபுரத்தில் உள்ளது. கணியூரின் அஞ்சலக தலைமையகம் உடுமலைப்பேட்டையில் உள்ளது என்றால் அதைப் பற்றி தெரியாது. வேறு முகவரிக்கு அனுப்பிய ரசீதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக வேறு எங்கேயோ எடுத்த உணவு மாதிரியை எதிரியிடம் கைப்பற்றப்பட்டதாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்குச் சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

(2) எதிரி வீட்டில் வைத்து வியாபாரம் செய்ததாக வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டது. எதிரி எந்த முறையில் விற்பனை செய்கிறார் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கடையே, வணிக நிறுவனமோ வைத்து நடத்தினால் தான் நான் புகாரில் சொல்லியுள்ளது போல் 12 லட்சம் ரூபாய்க்கு வியாபாரம் செய்ய முடியும் என்றால் சரியல்ல. எதிரி வைத்திருந்ததாக சொல்லும் 25 கிலோ உணவு பொருட்களை எடை போட்டு பார்த்தேனா என்றால் இல்லை உத்தேசமாக சுமார் 25 கிலோ என்று குறிப்பிட்டேன். நான் உணவு பாதுகாப்பு அலுவலராக இருந்து ஆய்வு செய்து உணவு பொருட்களை கைப்பற்றினேன் என்றால் சரிதான். எனது

பெயர் ஏ.வி.லோகநாதன். வழக்கு கோப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 1ம் ஆணவத்தில் எனது பெயர் இல்லை என்றால் நான் உணவு பொருட்களை கைப்பற்றிவிட்டு கோவைக்கு மாற்றலாகி சென்றுவிட்டேன் லியோ ஆண்ட்ரூஸ் என்ற உணவு பாதுகாப்பு அதிகாரியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. 29.06.2018 தேதியிட்ட உத்திரவிலும் எனது பெயர் இல்லை என்றால் சரிதான் எனக்கு பின்னால் நியமிக்கப்பட்ட அலுவலர் பதவி ஏற்றுக்கொண்ட உத்திரவு தான் அது. நான் உணவு பாதுகாப்பு அலுவலராக நியமிக்கப்பட்டதற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(3) நான் தாக்கல் செய்துள்ள 2வது ஆவணம் ரொக்க ரசீதில் 2 கிலோ பகுப்பாய்விற்காக விற்பனை செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். பொதுவாக டீ தூள் விற்பனை செய்பவர்கள் தான் ரசீது வைத்திருப்பார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ரசீது எதிரியுடையது அல்ல என்றால் சரிதான் நாங்கள் ரசீது தயார் செய்து அவரிடம் கையொப்பம் பெற்றோம். ரசீதில் கையொப்பம் அவரிடம் பெற்று மற்ற விவரங்கள் என்னால் பூர்த்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல எதிரியால் பூர்த்தி செய்யப்பட்டது. ரசீதில் சாட்சியிடம் கையொப்பம் மட்டும் பெறப்பட்டுள்ளது என்றும் தந்தை பெயர் மற்றும் முகவரி இல்லை என்றால் சரிதான். எதிரிக்கு அவர் பெயரை கையொப்பம் செய்ய மட்டும் தான் தெரியும் என்றும் ரசீதில் உள்ள விவரங்கள் பூர்த்தி செய்ய தெரியாது என்றால் சரியல்ல. ரசீது உண்மையானது அல்ல என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக முன்னுக்கு பின் முரணாக அளவுகளை மாற்றி எழுதி அவசர கதியில் பொய்யாக எதிரி மீது இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மகஜர் மனு எதிரியால் எழுதி கொடுக்கப்பட்டது. சட்டவிதிகளின் படி தயாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மகஜர் தயாரிக்க சட்ட விதிகளில் அவசியமில்லை என்றால் சரிதான். எதிரியிடம் வெற்றுத்தாளில் கையொப்பம் பெற்று விட்டு சட்ட விரோதமாக மகஜர் தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என்ன மகஜர் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மகஜர் தாக்கல் செய்ய சட்டத்தில் இடம் இல்லை என்றால் சரியல்ல.

(4) டீ தூளின் காலாவதி காலம் 10 மாதங்கள் என்றால் சரியல்ல. காலவாதி காலம் முடிந்த பின்பு டீ தூளின் தன்மை மாறிவிடும் என்றால் சரிதான். டீ தூளின் தரத்தை

பொறுத்து காலாவதி காலம் மாறும். கைப்பற்றப்பட்ட உணவு பொருட்கள் 10 மாதங்களுக்கு பின்பு தான் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். காலாவதியானதற்கு பின்பு பகுப்பாய்வு செய்யப்பட்டதால் வழக்கு உணவு பொருளின் தன்மை மாறிவிட்டது என்றால் சரியல்ல. ஆவண எண்.5 ல் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்ட மாதிரி முத்திரையில் எனது கையொப்பத்திற்கு கீழே 14.11.2018 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல 19 என்பதை வேகமாக எழுதியதால் 14 போல் தெரிகிறது. வேறு வழக்கில் கைப்பற்றப்பட்ட டீ தூள் மாதிரியை இந்த வழக்கில் அவசர கதியில் அனுப்பி அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(5) ஆவண எண்.6 ல் எதிரியை மிரட்டி கையொப்பம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. கடிதத்தில் எழுதப்பட்டுள்ள விவரங்கள் யாரால் எழுதப்பட்டது என்றால் நான் எழுதினேன். அதில் உணவு பொருள் விற்பனை கடை என்று உள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே தயாரிக்கப்பட்ட படிவத்தில் கையொப்பம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். சாட்சியின் முகவரி மற்றும் தந்தை பெயர் இல்லை என்றால் சரிதான். ஆவண எண்.7 ல் மதுரை பகுப்பாய்வுக்கு அனுப்பிய ரசீதில் 600 கிராம் அனுப்பியதாக உள்ளது என்றால் சரிதான். ஆய்வு அறிக்கையில் தர நிர்ணயங்கள் அனைத்தும் சரியாக உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி டீ தூள் விற்பனை செய்யவில்லை புள்ளி விவர கணக்கிற்காக பொய்யாக எதிரி மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பணி நியமன உத்திரவு இல்லாமல் ஆய்வு செய்ய எனக்கு அதிகாரம் இல்லாமல் ஆய்வு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த ஆய்வும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்